Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.384/2025

Dated 09-04-2026
Deposition of witness for : PW 4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பிரதீப்குமார் | வயது | : | 22 |
| தந்தை பெயர் | : | சேகர் | தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| கிராமம் | : | பர்மாகாலனி, பாரதிதாசன் தெரு | தொழில் | : | டைல்ஸ் |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused 1 to 5 produced. Accused 6 to 13 present**

**Ld. D. Counsel not Present**

சாட்சியை தஞ்சாவூர் தாலுக்கா காவல்நிலைய மு.நி.கா. **1348** பிரகாஸ்குமார் அடையாளம் காட்டினார்.

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் மேற்கண்ட முகவரியில் குடும்பத்தோடு வசித்து வருகிறேன்.

2)இந்த வழக்கில் இறந்த சசிகுமாரை தெரியும். அவர் என் நண்பர். அ.சா.1,2,3 ஆகியோர்களை

தெரியும்.

3) 9.9.2025 அன்று கலைஞர் நகர் 1வது தெருவில் உள்ள சூர்யா வீட்டிற்கு காலை 10.45 மணியளவில் நான், சசிகுமார், திலகன் ஆகியோர் சென்றோம். அங்கு சூர்யா எங்கள் மூவரிடம் என்னதான் பிரச்சினை என்று கேட்டான். கேட்ட கொஞ்ச நேரத்தில் சக்தி, கோகுல், சஞ்சய், பிரபா மற்றும் காலேஜ் பசங்க எல்லோரும் சூர்யா வீட்டிற்கு அருகே வந்துவிட்டார்கள்.

4) உன் வீட்டில் கஞ்சா அடிச்சா ஒத்துக்குவியா அதனால் தான் வாழை என்கிற தினேஷை அடித்தேன் என்று சொன்னான். அதற்காக வாழையை அடிப்பியா என்று சசிக்குமார் சக்தியை கேட்டான். அதற்கு சக்தி நீ என்ன அவனுக்கு சப்போட்டா நீ என்ன அவ்வளவு பெரிய ஆளா என்று சசிக்குமாரை கேட்டான். அப்போது சக்தி, கோகுல் எல்லோரும் கத்த ஆரம்பித்தார்கள். அப்போது சூர்யா நான் இருப்பது வாடகை வீடு இங்க இருந்து பேசாதிங்க எதுவாக இருந்தாலும் தெரு முனைக்கு போங்க என்று சொன்னான். அப்போது சசி முன்னால் நடந்து சென்றான். சக்தி, கோகுல், சஞ்சய், பிரபா, சபரி, சுஜித், ரஞ்சித், வசந்த், பிரேம், நிமோசன், மோகன், சரண் எல்லோரும் பின்னாடியே சென்றார்கள்.

5) சசி மட்டும் தனியாக சென்றதால் நான், சூர்யா, திலகன் ஆகிய மூவரும் அவனுக்கு பின்னால் சென்றோம். அவ்வாறு போகும்போது ஆதிமூலம் பிளாட் அருகே சென்றபோது எதிரிகளின் வரிசையில் 7வது ஆளாக நிற்கும் சுஜித் குமார் சசிக்குமாரின் தலையில் குத்தினான். உடனே சக்தி வைத்திருந்த வாளால் சசிக்குமாரை வெட்டினான். ராஜாவும்

அவன்வைத்திருந்த அருவாளால் சசிக்குமாரின் மண்டையின் பின்பகுதியில் வெட்டினான். கூட வந்த பசங்க எங்களை தடுக்கவிடாமல் சுற்றி நின்றுகொண்டார்கள். தடுக்க போன சூர்யாவை சரணும், பிரபாவும் பிடித்துக்கொண்டார்கள். சூர்யாவை தள்ளிவிட்டு திலகன் மண்டையில் பிரபா அடித்துவிட்டான். மத்த பசங்க சுற்றி நின்றுக்கொண்டு யார் தடுக்க வந்தாலும் இதே நிலைமைதான் என்று சொன்னார்கள். நாங்கள் கத்தி பார்த்தோம். ஏரியாவில் உள்ள ஆட்கள் வந்துவிட்டார்கள்.

6) சம்பவ இடத்திலேயே சசிக்குமார் இறந்துவிட்டான். சம்பவ இடத்திற்கு சசிக்குமாரின் அம்மா, மற்றும் அக்கா காவ்யா இருவரும் வந்துவிட்டார்கள். வந்து சூர்யாவிடம் சசிக்குமார் அம்மாவும் அக்காவும் எதுக்குடா பிரச்சினை என்ன நடந்தது என்று கேட்டார்கள். அதற்கு சூர்யா சக்தி, கோகுல், ராஜா, பிரபா ஆகியோர்கள் வெட்டிவிட்டார்கள். எங்களால் தடுக்ககூட முடியலம்மா என்று சூர்யா சொன்னான்.

7) கொஞ்ச நேரத்தில் ஆம்புலன்ஸ் வந்து சசியை தூக்கி கொண்டுபோனார்கள். சசியின் அம்மா தஞ்சாவூர் தாலுக்கா காவல்நிலையத்தில் போய் புகார் கொடுத்தது.

8) பிறகு சூர்யா திலகனிடம் எதுக்குடா இப்படி பன்னினார்கள் இவ்வளவு மோசமா வெட்டி இருக்கிறார்கள் என்னதான் பிரச்சினை நடந்தது என்று கேட்டான். அதற்கு திலகா 2 மாதத்திற்கு முன்பு வாழை தினேஷ் சக்தி வீட்டிற்கு சென்று Free Fire Game விளையாட சென்றதாகவும் அப்போது சக்தி, ராஜா, கோகுல் ஆகியோர்கள் கஞ்சா அடித்துகொண்டிருந்தார்கள் என்றும் அதை எடுத்து பார்த்ததற்கு நீ எதற்கு எடுத்து

பார்க்கிறாய் என்று சக்தி கேட்டதாகவும் அதனால் சக்தி, சஞ்சை இருவரும் வாழை தினேஷை அடித்துவிட்டதாகவும் அதை தினேஷ் திலகாவிடம் சொன்னதாகவும் திலகா உடனே போனில் சக்தி , சஞ்சை இருவரிடம் பேசியவுடன் அவர்கள் நீ என்ன அவனுக்கு சப்போட்டா உன்னை கொன்னுபுடுவேன் பார்த்து இருந்துக்க என்று சக்தியும், சஞ்சையும் மிரட்டினார்கள் என்றும் அதனால் திலகன் போனை கட் செய்துவிட்டு சசியைபோய் பார்த்து அவனிடம் திலகன் இந்த விபரத்தை சொல்லி உள்ளான் என்றும்,

9) உடனே சசிக்குமாரும் சக்தி, ராஜா, ஹரியிடம் போனில் பேசி உள்ளான். அவனையும் நீ இதெல்லாம் கேட்காதே நீ காலையில் உயிருடன் இருக்கமாட்டாய் என்ற மேற்படி மூவர்களும் மிரட்டி உள்ளார்கள் என்றும் உடனே போனை வைத்துவிட்டதாகவும் திலகன் சொல்லி உள்ளான்.

10) 9.9.2025 ம் தேதி சசிக்குமாரின் இரண்டு சக்கர வாகனத்தை கேட்க நான் அவன் வீட்டிற்கு போனேன். அப்போது திலகன் அங்கு இருந்தான். அப்போது கலைஞர் 1 வது தெருவில் ஒரு பஞ்சாயத்து பேசிவிட்டு வண்டியை எடுத்துக்கொண்டு போ என்று சசி சொன்னான். பிறகு நான், சசி, திலகன் மூவரும் சூர்யா வீட்டிற்கு சென்றோம். போனபோது சண்டை நடந்தது. இதுதான் திலகனிடம் சூர்யா சொன்னான்.

11) சம்பவ இடத்திலேயே போலிசார் என்னை விசாரித்தார்கள். 15.09.2025 ம் தேதி தஞ்சாவூர் நீதித்துறை நடுவர் எண்.2 நடுவர் அவர்கள் என்னை விசாரித்தார்கள். 23.09.2025 அன்றும் போலிசார் என்னை வந்து வீட்டில் விசாரித்தார்கள். இதற்கு இடையில் சக்தியின் அம்மா

நதியா என்பவர் போனில் இன்ஸ்ட்ராகிராமில் பணம் தரேன் சாட்சி சொல்லாதே என்று சொன்னார்கள். சஞ்சையின் அக்கா கணவர் என் அண்ணனுக்கு போன் செய்து எல்லோரும் ஒரே ஏரியா சாட்சி சொல்லாதே என்று சொல்லி உள்ளார்.

12) ஆஜர் எதிரிகளில் வரிசை 2 வதாக இருப்பதுதான் ராஜா என்ற சஞ்சய். அவர்தான் அருவாளால் சசிக்குமாரின் தலையில் வெட்டினார். ( நீதிமன்றம் வரிசையில் உள்ள 2 வது எதிரியின் பெயர் என்ன என்று கேட்டபோது அவர் தன்னுடைய பெயர் சஞ்சய் என்று கூறினார். ) வரிசை 4 வதாக இருப்பவர் பெயர்தான் சக்தி. அவர்தான் வாளால் சசிக்குமாரின் தலையில் வெட்டினார். . ( நீதிமன்றம் வரிசையில் உள்ள 4 வது எதிரியின் பெயர் என்ன என்று கேட்டபோது அவர் தன்னுடைய பெயர் ஹரிஹரன் என்றுகூறினார். ஆனால் அவனை ஏரியாவில் சக்தி என்றுதான் கூப்பிடுவோம் என்று சாட்சி சொல்கிறார். ) சக்தி வெட்டிய வாளை அவருடைய தம்பி கோகுல் வாங்கி சசிக்குமாரின் தலையில் வெட்டினார். வரிசையில் 5 வதாக இருக்கும் எதிரியின் பெயர்தான் கோகுல். . ( நீதிமன்றம் வரிசையில் உள்ள 5 வது எதிரியின் பெயர் என்ன என்று கேட்டபோது அவர் தன்னுடைய பெயர் கோகுல் என்று கூறினார். ) ராஜா வைத்திருந்த அருவாளை வாங்கி பிரபா சசிக்குமாரின் தலையில் வெட்டினார். வரிசையில் 3 வதாக இருக்கும் எதிரியின் பெயர்தான் பிரபா ( நீதிமன்றம் வரிசையில் உள்ள 3 வது எதிரியின் பெயர் என்ன என்று கேட்டபோது அவர் தன்னுடைய பெயர் பிரபாகரன் என்று கூறினார். ) மற்றவர்கள் சுற்றி நின்றுக்கொண்டு அவர்களுக்கு உதவியாக இருந்தார்கள். வெட்டுவதற்கு காரணமே ஹரிஹரன்தான்.

வெட்ட பயன்படுத்திய அருவாளும், வாளும் ஹரிஹரன்தான். வரிசையில் 1 வதாக நிற்கும் எதிரியின் பெயர்தான் ஹரிஹரன். ( நீதிமன்றம் வரிசையில் உள்ள 1 வது எதிரியின் பெயர் என்ன என்று கேட்டபோது அவர் தன்னுடைய பெயர் ஹரிஹரன் என்று கூறினார்.)

13) என்னிடம் காட்டப்படும் இந்த வாளாலும் இந்த அருவாளாலும்தான் சசிக்குமாரை வெட்டினார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

12 வது எதிரி தரப்பில் வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய தயாராக உள்ளார். மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய மனு தாக்கல் செய்ய இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. அதனால் மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்து முடித்த பிறகு 12 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டது)

குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.

VELMURUGAN P

Digitally signed by VELMURUGAN P
Date: 2026.04.09 19:10:36 +0530